ந.க.எண்.110 /2013/அ1 / நாள் : 11.06.2013

# கம்பைநல்லூர் முதல்நிலை பேரூராட்சி
# தருமபுரி மாவட்டம்.

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தருமபுரி மாவட்டம் கம்பைநல்லூர் முதல்நிலை பேரூராட்சியில் 2013–2014ம் ஆண்டில் "**பகுதி II திட்டத்தில்" கீழ்**கண்ட வேலைகளை செய்து முடிக்க கம்பைநல்லூர் முதல்நிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் (E-Tender) அல்லது மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் கம்பைநல்லூர் முதல்நிலை பேரூராட்சி அலுவலகத்தில் 27.06.2013ம் தேதி வியாழ கிழமை பிற்பகல் 3.00 மணி வரை கம்பைநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் (அல்லது) அவரது அனுமதி பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலிக்கப்படும். ஒப்பந்தபுள்ளி படிவங்களை இணையத்தளத்திலிருந்து E-Token/Digital Signature card உபயோகித்து தகவலை பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் அல்லது ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 26.06.2013ம் தேதி புதன் கிழமை பிற்பகல் 5.00 மணி வரை உரிய தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இதர விபரங்கள் அலுவலக வேலை நாட்களில் நேரில் கேட்டு தெரிந்துக் கொள்ளலாம்.

## பகுதி II திட்டம் 2013–2014

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சம்) | டேவணித் தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி படிவம் தொகை (ரூ.) | பணி முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்ததாரர் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | கம்பைநல்லூர் பேரூராட்சி அலுவலக வளாகத்தில் சர்வே. எண். 87/1–ல் புதிய பேரூராட்சி அலுவலக கட்டிடம் கட்டுதல். | 45.00 | 45000/- | 9360/- | 9 மாதங்கள் | முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு |

(த.பி.பா)

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **11.06.2013–ம்** நாள் முதல் கீழ்க்கண்ட இணையதளத்திலிருந்து **இலவசமாக** பதிவிறக்கம் செய்யலாம். https://tntender.gov.in and http://town panchayat.tn.gov.in/ tenders

2. ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறை விதிகளை ( ஒளிமறைவற்ற ஒப்பந்த விதிகள் ) பின்பற்றி பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 27.06.2013–ம் நாளன்று பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் மின்னணு இணையதளம் மூலம் **(E-Tendering)** வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. பணிகளின் ஒப்பந்த மதிப்பில் (Contract Value) 1 சதவிதம் முன் வைப்புத் தொகையாக (EMD) செலுத்த வேண்டும்.

5. வேலை முடிக்கப்படவேண்டிய கால அளவு 9 மாதத்திற்குள் பணி முடிக்கப்பட வேண்டும்.

6. பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தினையும், அரசு தொழில் நுட்பக்கல்லூரியில் ஆய்வு செய்து சான்றிதழ் பெற வேண்டும்.

7. மேற்படி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் பொழுது, ஒவ்வொரு நிலையிலும் பணியின் தரம் உறுதி செய்யப்பட வேண்டும்.

8. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும், பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடித்த பின்னரும் புகைப்படம் எடுக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்பட வேண்டும். எடுக்கப்படும் மூன்று புகை.படமும் ஒரே இடத்தைக் காட்டும்படியாக இருத்த வேண்டும்.

9. செயற் பொறியாளரிடம் சோதனை அளவுகள் சான்று பெறப்பட வேண்டும்.

10. மண்பரிசோதனையினை உடனடியாக அரசு பொறியியல் கல்லூரியில் மேற்கொண்டு வடிவமைப்புக்கு ( Design) ஏற்ற வகையில் மண்ணின் தரத்தினை ( SAFE BEARING CAPACITY OF SOIL ) பெற்று வடிவமைப்பினை தயாரிக்க வேண்டும்.

11. Engineering Manual படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்ததாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் ( PENALTY FOR SLOW PROGRESS) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5 சதவீதம் விதித்து பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

12. மேற்படி திட்டத்தின் மூலம் பணிகள் முபமையாக முடிக்கப்பட்ட உடன் பணி வாரியான திட்ட முடிவறிக்கை ( PROJECT COMPLEION REPORT) அதற்கென நிர்ணயிக்கப்பட்ட படிவங்களில், உரிய புகைப்படத்துடன் அனுப்பி வைக்க வேண்டும்.

13. ஒப்பந்ததாரரின் தகுதி வகுப்பிற்கு தகுந்தவாறு பணிகளை ஒப்பந்ததாரகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

14. பணி ஆரம்பிப்பதற்கு முன், பணி நடைபெறும் மற்றும் பணி முடித்த பின்னர் புகைப்படம் எடுக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்பட வேண்டும். எடுக்கப்பட்ட புகைபடங்கள், குறுந்தகடில் (CD) மூலம் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

15. பணி நடைபெறும் இடங்களில் பணி குறித்த விவரங்கள் அடங்கிய தரமான பலகைகள் அதாவது 4 அடி x 2 1/2 அடி ( 1.20m x 0.75m ) ஏற்கனவே அறிவுறுத்தியவாறு வைக்கப்பட வேண்டும்.

16. கட்டிட பணிகளின் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அவசியம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

17. கட்டிடங்களில் சூரிய சக்தியை பயன்படுத்த வழிவகை செய்யப்பட வேண்டும்.

18. கட்டிடங்களில் ஆற்றல் மிக்க குறைந்த சக்தி திறனில் இயங்கும் LED விளக்குகள் மின்விசிறிகள் பொருத்தப்பட வேண்டும்.

19. இப்பணிகள் சம்பந்தமாக நிபந்தனைகள் மற்றும் கூடுதல் விபரங்களை பேரூராட்சி அலுவலக வேலை நாட்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**முக்கிய தினங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தகாரர் முன் கலந்தாய்வு கூட்டம் (Pre-Bid Meeting) நடைபெறும் நாள் மற்றும் நேரம் | **24–06–2013 முற்பகல் 11.00 மணி** |
| 2 | ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய கடைசி தேதி மற்றும் நேரம் | **27.06.2013 பிற்பகல் 3.00 மணி** |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் (மின்னணு மூலம் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளியையும் சேர்த்து) | **27.06.2013 பிற்பகல் 3.00 மணி** |
| 4 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் திறப்பு நாள் மற்றும் நேரம் | **27.06.2013 பிற்பகல் 3.30 மணி** |

20. மேற்கண்ட தினங்களில் எதிர்பாராமல் அரசு விடுமுறை ஏதேனும் அறிவிக்கப்பட்டால் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பெற்றுக்கொள்வது மற்றும் ஒப்பந்தப்புள்ளி திறப்பு அடுத்த வேலை நாட்களில் நடைபெறும்.

21. இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

**ஒம்/– க.இலட்சுமிகாந்தன்**
**செயல் அலுவலர்**
**முதல்நிலைப் பேரூராட்சி**
**கம்பைநல்லூர்**
**தருமபுரிமாவட்டம்.**

**பெறுநர்:**

பேரூராட்சி பதிவுபெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்கள்
கம்பைநல்லூர் பேரூராட்சி.

**நகல்:**

1. இயக்குநர் அவர்கள், பேரூராட்சிகள், சென்னை – 108 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், தருமபுரி மாவட்டம், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், தருமபுரி மண்டலம், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலகம், தருமபுரி மண்டலம், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.
5. இளநிலை பொறியாளர், பேரூராட்சிகள், அரூர் தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.
6. அலுவலக விளம்பர பலகைக்கு.
7. தலைவர், துணைத்தலைவர் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்.